1971 டிசம்பர் 14]

திருப்பூர் ஒன்றியத்தில் அரசு மேற்கொண்டுள்ள சாலைகள்

*371 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1970-ம் ஆண்டில் திருப்பூர் ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்ற சாலைகளில் அரசு எடுத்துக்கொண்ட சாலைகள் எத்தனை கிலோ மீட்டர் ?

(இ) அப்படி எடுக்கப்பட்ட சாலைகள் தார் ரோடாக மாற்றப் பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) 21.2 கிலோ மீட்டர்

(இ) அரசு எடுத்துக்கொண்ட நான்கு சாலைகளில் இரண்டு சாலைகளின் சில பகுதிகள் தார் ரோடாக மாற்றப்பட்டுள்ளன.

புத்தாம்பூர் குளம்

*372 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கரூர் வட்டம், புத்தாம்பூர் குளத்தை புதுப்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 1.20 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையிலுள்ளது.

வங்காரம் காட்டில் பாசன ஏரி

*373 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், அயன்தத்தனூர் பஞ்சாயத்திலுள்ள வங்காரம் பாதுகாக்கப்பட்ட காட்டில் ஆயக்கட்டு ஏரி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இத் திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது.

(இ) வனத்துறையினரின் இசைவு பெற்று, மேற்பார்வைப் பொறியாளரின் ஒப்புதல் பெற்றபின், திட்டம் எடுத்துக் கொள்ளப் படும்.